தமிழக சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1967 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. ப. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்தச் சட்டப் பேரவையின் முதல் அலுவல், கேள்விகள் பதில்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு கேள்விகள் இல்லை. ஆகையால், அடுத்த அலுவல், மாண்புமிகு மன்ற முதல்வர், கல்வி அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவைக் கொண்டு வர அனுமதி கோருவார்கள்.

1. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதா.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன்.

திரு. ரா. கனகசபை : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த மசோதா சபை முன் வருவதற்குமுன் அங்கத்தினர்களுக்கு முதல் நாளே அதை அனுப்பிவிட வேண்டும்.

If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may put the question thereon.

என்றிருக்கிறது நமது பேரவை விதி. 'அப்போஸ்' செய்வது என்று சொன்னால் மசோதாவின் கருத்து தெரிந்தால்தான் மேலே பேச முடியும். லோக் சபையில் கூட மசோதா முதல் நாளே எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டு விடுகிறது. ஆகவே, இனிமேல் ஒரு மசோதா மறுநாள் இங்கு சபை முன் வருகிறது என்றால் முன்பே அதை அங்கத்தினர்களுக்கு அனுப்பி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்த ஒழுங்குப் பிரச்சினை மீது என்னுடைய தீர்ப்பு. இந்தச் சட்டப் பேரவையின் நடவடிக்கைகள் நம் 249 விதிகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். 249 விதிகளுக்கு உட்படவில்லை என்றால் அரசியல் சட்ட 194-வது பிரிவின்படி ஹவுஸ் ஆஃப் காமன்ஸ், இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்தில் என்ன நடைமுறையோ அந்த நடைமுறையை நான் கடைப்பிடித்தாகவேண்டும். அரசியல் சட்டபடி நான் நடப்பேன் என்று நான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய 249 விதிகளுக்கு அப்பாற்பட்டு ஏதாவது ஒரு கருத்து இருக்குமானால், இங்கிலாந்து நாட்டிலுள்ள பாராளுமன்ற நடைமுறைப்படி நான் நடக்க கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சட்ட 194 பிரிவுப்படி லோக் சபாவில், டெல்லியில் என்ன நடக்கிறதோ அதன்படி நடக்க வேண்டும் என்பது அரசியல் சட்டமல்ல. ஆகவே, இந்த மசோதாக்கள் எல்லாம், நடைமுறை எப்படியென்றால் மூன்று முறை இந்தப் பேரவை முன்னால் வைக்கப்படும். முதல் முறை சட்டப் பேரவையின் அனுமதியோடு மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அதைக் கொண்டுவருவார்கள். அதற்குப் பின்னால் அந்த மசோதாவானது கெஸட்டில் அறிவிக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்படும். பிறகு இரண்டாவது முறை வாசிப்பு நடக்கும். அப்போது ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாகவே விவாதிக்கப்படும். மூன்றாவதாக நிறைவேற்றப்படும். இந்த நடைமுறைப்படி இப்போது மாண்புமிகு மன்ற முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம்—" தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சட்டப் பேரவை (தகுதியின்மைகள் தடுப்பு) மசோதாவைக் கொண்டுவர பேரவை அனுமதி அளிக்கிறது " என்பது தீர்மானம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முன்னுரைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்த மசோதா முன்னுரைக்கப்படுகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து என்னவென்றால், முதலில் இன்ட்ரட்யூஸ் செய்த பிறகுதான் பப்ளிகேஷன் செய்யவேண்டுமென்று விதி சுத்தமாக இருக்கிறது. இருந்தபோதிலும் அங்கத்தினர்களின் தகவலுக்காக சர்குலேஷன் செய்யும் மற்ற பேப்பர்களுக்கு இணங்க இதையும் அப்படிச் செய்வதாகயிருந்தால்

(திரு. பி. ஜி. கருத்திருமன்) [1967 மார்ச் 25

நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விதிகளைத் திருத்தியாவது மசோதாவை முன்னால் கொடுக்கவேண்டும் என்பது கருத்து என்று நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மாண்புமிகு நண்பர், எதிர் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியுள்ளார். அதன் மீது என்னுடைய தீர்ப்பைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மசோதாவை முதல் முறையாக இந்தச் சட்டப் பேரவையின் முன் கொண்டுவரும்போது எவருமே எதிர்ப்பது கிடையாது. ஆகவே, அதன்படி முதன் முறையாக இந்தச் சட்டப் பேரவையில் மசோதாவைக் கொண்டு வருவதை எதிர்த்துப் பேசுவதற்கு இடம் அளிக்கவேண்டுமென்று கேட்பது சரியல்ல. . . .

திரு. ரா. கனகசபை : விதி 92 (1)-ல் பேசலாம் என்று இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மறுத்துப் பேச என்று சொல்ல வில்லை. அங்கத்தினர்களுக்கு முதலில் தகவல் கொடுக்கவேண்டு மென்ற நிலை இருக்கவேண்டும் என்கிறார்கள்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்த அவையின் முன் கொண்டுவர அனுமதித்து அவைமுன் வைக்கப்பட்ட பிறகு கெஸட்டில் வெளியிடப்பட்டு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு பிரதி கொடுக்கப்படும். அதுதான் வழக்கம். அதுதான் பேரவையின் விதிமுறை.

திரு. ரா. கனகசபை : விதி 92 (1)-ல் இருக்கிறது.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : பேசுவதற்கு அனுமதி மறுக்கவில்லை. மாண்புமிகு மன்ற முதல்வர் அவர்கள் மசோதாவை கொண்டுவந்தபோது எதிர்ப்பதற்கு யாராவது இருந்தால் அவர்கள் பேசியிருக்கலாம். அப்போது பொதுவான விவாதம் வேண்டு மென்று கோரினால் கொடுத்தாகவேண்டும். அதற்காக முன் கூட்டியே அந்த மசோதாவின் பிரதி கொடுக்கவேண்டுமென்று விதிகளில் இல்லை.

2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, கடந்த 1966–67-ம் ஆண்டுக்கான செலவு குறித்த—கடந்த ஆண்டு என்று சொல்லும் போது இன்னும் ஒரு வாரத்தில் முடியப் போகும் ஆண்டுக்கு உண்டான செலவு—இறுதித் துணை அறிக்கைமீது இப்போது பொது விவாதமும், அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும் இன்று நடைபெற இருக் கின்றன. மாண்புமிகு அங்கத்தினர்கள் வெட்டுத் தீர்மானங்கள்